# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1868/66 - 2014 ජූනි මස 27 වැනි සිකුරාදා - 2014.06.27

*1868/66 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு யூன் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**ஊவா மாகாண மாகாண சபை**

**ஊவா மாகாண மாகாண சபையின் 2014 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, ஊவா மாகாண ஆளுநரின் நிதியம் பற்றிய (திருத்த) நியதிச்சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாண மாகாண சபையால் 2014, யூன் மாதம் 05 ஆந் திகதி சம்மதிக்கப்பட்டு, 2014, யூன் மாதம் 01 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்துவதற்காக ஊவா மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்டுள்ள பூர்வாங்க நியதிச் சட்டத்தை அனைவரினதும் கவனத்திற்காக இத்தால் வெளியிடுகின்றேன்.

ஆர். ஏ. எச். ஏ. சமரசிங்க,
செயலாளர்,
ஊவா மாகாண மாகாண சபை.

ஊவா மாகாண சபைச் செயலகம்,
இராஜ வீதி,
பதுளை,
2014, யூன் 17.

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு**

ஊவா மாகாண, மாகாண சபை

**ஊவா மாகாண, மாகாண சபையின் 2014 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, ஊவா மாகாண "ஆளுநரின் நிதியம்" பற்றிய (திருத்த) நியதிச்சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாண, மாகாண சபையினால் பின்வருமாறு விதிக்கப்படுகின்றது :-

இந்நியதிச்சட்டத்தின் மூலம் ஊவா மாகாண, மாகாண சபையின் 2010 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க "ஆளுநரின் நிதியம்" பற்றிய (திருத்த) நியதிச்சட்டம் ரத்து செய்யப்படுவதுடன், ஊவா மாகாண சபையின் 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க ஊவா மாகாண சபையின் ஆளுநரின் நிதியம் பற்றிய நியதிச்சட்டத்தின் 3 (2), 3 (3) மற்றும் 3 (4) ஆம் உப சரத்துகளுக்கு பதிலாக கீழ் உள்ள உப சரத்துகளை பதிலீடு செய்வதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றன.

சுருக்கப் பெயர் மற்றும் நடை முறைக்கு வரும் திகதி.

1. இந்நியதிச்சட்டமானது, ஊவா மாகாண, மாகாண சபையின் 2014 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஊவா மாகாண ஆளுநரின் நிதியம் பற்றிய (திருத்த) நியதிச்சட்டம் என அழைக்கப்படுவதுடன், ஊவா மாகாண ஆளுநர் அவர்களுடைய அனுமதி கிடைத்த நாள் முதல் நடைமுறைக்கு வரும்.

முதன்மை நியதிச் சட்டத்தின் 3 (2) உப சரத் தினை திருத்துதல்.

2. 3.2 இங்கு இதன் பின்னர் “சபை” எனக் குறிப்பிடப்படுகின்ற நிதியத்தின் கட்டுப்பாட்டுச்சபை, கீழ் குறிப்பிடப்படுகின்றவர்களை உள்ளடக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

(அ) ஊவா மாகாணத்தின் ஆளுநர் ;

(ஆ) ஊவா மாகாணத்தின் முதலமைச்சர் அல்லது அவரால் பெயர் குறிப்பிடப்படும் பிரதிநிதி ஒருவர் ;

(இ) ஊவா மாகாண, மாகாண சபையின் தவிசாளர் ;

(ஈ) ஊவா மாகாண, மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் அல்லது அவரால் பெயர் குறிப்பிடப்படும் பிரதிநிதி ஒருவர் ;

(உ) ஊவா மாகாணத்தின் தலைமைச் செயலாளர் ;

(ஊ) ஊவா மாகாண ஆளுநரின் செயலாளர் ;

(எ) ஊவா மாகாண, மாகாண சுகாதார சேவைப்பணிப்பாளர் ;

(ஏ) ஊவா மாகாண, மாகாண கல்விப்பணிப்பாளர் ;

(ஓ) அதற்கு மேலதிகமாக ஊவா மாகாண ஆளுநரின் விருப்பத்திற்கமைய ஊவா மாகாண அரச சேவையைச்சேர்ந்த கணக்காளர் ஒருவர், ஊவா மாகாணத்தை நிரந்தர வசிப்பிடமாக கொண்ட வழக்கறிஞர் ஒருவர், மேலுமொரு அங்கத்தவர் ஆகியவர்களை உள்ளடக்கிய மூவர் நியமிக்கப்படல் வேண்டும். ஆளுநரினால் ஒவ்வொருவருக்கும் வழங்கப்படும் நியமனக்கடிதத்தில் குறிப்பிடப்படும் காலப்பகுதிக்கு ஒவ்வொருவருக்கும் இத்திருத்த நியதிச் சட்டத்தின் (3) ஆம், (4)ஆம் உப சரத்துகளின் விதிமுறைகளுக்கமைவாக பதவிகளை வகிக்க வேண்டும்.

முதன்மை நியதிச் சட்டத்தின் 3 (3) உப சரத் தினை திருத்துதல்.

3. 3.3 ஆளுநரினால் இத்திருத்த நியதிச்சட்டத்தின் (2) ஆம் உப சரத்தின் (ஓ) பந்தியில் நியமிக்கப்படும் எவரேனும் உறுப்பினரொருவரின் நியமனத்தினை ஆளுநரினால் தனது விருப்பத்திற்கமைய நிராகரிக்கலாம்.

முதன்மை நியதிச் சட்டத்தின் 3 (4) உப சரத் தினை திருத்துதல்.

4. 3.4 இத்திருத்த நியதிச்சட்டத்தின் (2) ஆம் உப சரத்தின் (ஓ) பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட சபையின் எந்தவொரு உறுப்பினரும், தாம் பதவியில் இருந்து விலகிக் கொள்வதாக ஒரு கடிதத்தின் ஊடாக ஆளுநர் அவர்களுக்கு அறிவிப்பதன் மூலம் எச்சந்தர்ப்பத்திலும் சபையிலிருந்து விலகிக்கொள்ள முடியும்.

ஒவ்வாமை ஏற் படும் பட்சத்தில் சிங்கள மொழிப் பிரயோகம் மேலோங்கி நிற்றல்.

5. இந்நியதிச்சட்டத்தின் சிங்கள, தமிழ் மொழி பிரயோகங்களுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழி பிரயோகமே மேலோங்கி நிற்கும்.

பொருள் கோடல்.

6. இந்நியதிச்சட்டத்தில் சொற்கள் தொடர்பாக வேறு விளக்கங்கள் தேவைப்பட்டாலன்றி,

“மாகாண சபை” என்பது, ஊவா மாகாண, மாகாண சபை என பொருள்படும்.

“ஆளுநர்” என்பது, ஊவா மாகாண ஆளுநர் எனப் பொருள்படும்.

7- 361

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.